அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 19/2016

எனது இல: EST-3/POLIC/04/0051
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2016.08.08

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத்த தலைவர்கள்

**<u>தேர்தல்களில் தோற்றுவதற்காக அரசாங்க சேவையில் இருந்து விலகிய அரசியல் ரீதியான உரிமைகளை இழந்த அலுவலர்களை மீளச் சேவையில் அமர்த்துதல்</u>**

தேர்தல்களில் தோற்றுவதற்காக அரசாங்க சேவையில் இருந்து விலகிய அரசியல் ரீதியான உரிமைகளை இழந்த அரசாங்க அலுவலர்களுக்கு மீளச் சேவையில் இணைந்து கொள்வது தொடர்பான மேள்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்குரிய சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு 2016.07.12 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

02. அதற்கமைய தாபனவிதிக் கோவையின் XXXII அத்தியாயத்தின் 1:3 பிரிவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1:3:1 உப பிரிவு உள்ளடங்கும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

1:3:1 தேர்தல் ஒன்றில் போட்டியிடுவதற்காக அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் தாம் வகித்த பதவியில் இருந்து விலகிய அல்லது ஓய்வு பெற்ற அல்லது அரசியல் ரீதியான உரிமைகளை இழந்த அலுவலர் ஒருவர் தாம் மீளச் சேவையில் அமர்ரத்தப்பட வேண்டுமென கருதுவாராயின், அவ் அலுவலர் இறுதியாக பணியாற்றிய அமைச்சின் செயலாளரிடம் மேன்முறையீடு ஒன்றை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதுடன், அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கேயுண்டு. அவ்வாறே அமைச்சுச் செயலாளரின் தீர்மானத்தினால் திருப்தியடையாத அலுவலர் ஒருவர் இருப்பின் தாம் இறுதியாக சேவையாற்றிய பதவிக்கான நியமன அதிகாரிக்கு மேன்முறையிடு செய்யலாம்.

03. 2007.10.31 ஆந் திகதிய 7/2004(II) இலக்கத்தைக் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை அமுலிலுள்ளதன் காரணமாக பாதிப்புக்குட்படுகின்ற அலுவலர்களுக்கு, மேற்படி 02 ஆம் பந்தியில் திருத்தியமைக்கப்பட்டுள்ள தாபனவிதிக்கோவையின் XXXII அத்தியாயத்தின் 1:3:1 உப பிரிவுக்கமைய மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியும்.

ஒப்பம்/ ஜே. ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு